# கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன?

*கிறிஸ்தவராய் இருத்தல் என்பது ஒருவர் இந்த உலகில் பெறக்கூடிய மிக உயர்ந்த கனத்துக்குரிய விஷயம் ஆகும். பவுல் ஒரு கிறிஸ்தவராயிருந்ததில் மகிழ்ச்சியடைந்தார் (அப். 26:28, 29). இந்த நாமத்தினாலே நாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று பேதுரு புத்தி கூறினார் (1 பேது. 4:16).*

*கிறிஸ்தவர் என்பதற்கு ஒரு சுருக்கமான மற்றும் எளிய விளக்கம் தரும்படி நான் அழைக்கப்பட்டால், "கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு நபர்" என்றே நான் கூறுவேன். கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பது என்பதற்கெதிராக கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் அர்த்தம் என்னவென்று கவனிக்கின்றதினால் கிறிஸ்தவராய் இருப்பது எவ்வளவு மாபெரும் விஷயம் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.*

## கிறிஸ்துவுக்கு புறம்பே இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன

*எபேசியர்கள் பாவத்தில் மரித்திருந்த நிலையின் விவரிப்பை எபே. 2ம் அதிகாரம் கொடுக்கின்றது (வ. 1, 2).*

*(1) அந்த வேளையில் அவர்கள் தேவனற்றவர்களாய் இருந்தார்கள் (வ. 12); அவர்கள் பரலோகத்தில் இருக்கின்ற ஒரு பிதாவை உடையவர்களாய் இல்லாதிருந்தார்கள். தேவனை நமது மாபெரும் பரலோக பிதாவாகக் கொண்டிருத்தல் என்பது நிபந்தனைக்குட்பட்டதாகும் (2 கொரி. 6:17, 18).*

*(2) அவர்கள் கிறிஸ்துவைச் சேராதவர்களாய் இருந்தார்கள் (வ. 12). அவர்களுக்குப் பிரதான ஆசாரியரோ, ஜெபிக்க ஒரு தேவனோ, ஜெபத்தை ஏறெடுக்கும் மூலமாக கிறிஸ்துவோ இல்லாதிருந்தார்கள். தேவனை கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நாம் அணுக முடியும். ஆகையால், கிறிஸ்துவைச் சேராத ஒருவர் பரலோகத்தின் அரியணையை ஜெபத்தில் அணுக முடியாது.*

*(3) அவர்கள் சமாதானமற்றவர்களாய் இருந்தார்கள், ஏனெனில்*

*"அவரே நம்முடைய சமாதான காரணராகி ..." (வ. 14).*

*(4) அவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாய் இருந்தார்கள் (வ. 12).*

*(5) அவர்கள் இஸ்ரவேலின் (ஆவிக்குரிய) காணியாட்சிக்குப் புறம்பானவர்களாய் இருந்தார்கள் (வ. 12).*

*(6) அவர்கள் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்தார்கள் (வ. 1).*

*கிறிஸ்துவுக்குப் புறம்பே இருத்தல் என்றால், பொல்லாங்கனுக்குள் கிடத்தல் என்று அர்த்தமாகும் (1 யோவா. 5:19, 20). பொல்லாங்கனுக்குள் கிடத்தல் என்றால், அவனது இராஜ்யத்தில், அவனது ஆளுகையின் கீழ் இருத்தல் என்று அர்த்தமாகும். "கிறிஸ்துவுக்குள்" மற்றும் "பொல்லாங் கனுக்குள்" என்பவை சாத்தியமான ஆவிக்குரிய இரு உறவுகளை விவரிக்கும் விளக்கங்கள் ஆகும். இடைப்பட்ட ஓரிடம் என்று எதுவும் இல்லை: ஒரு நபர் கிறிஸ்துவுக்குள்ளோ அல்லது பொல்லாங்களுக்குள்ளோதான் இருக்க முடியும். கணக்கொப்புவிக்கும் நிலையில் உள்ள மக்களைப் பற்றி மட்டுமே பேசுகின்றோம்.*

## கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன

*கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் தேவனை உடையவர்களாய் இருந்தார்கள், ஏனென்றால் நாம் கிறிஸ்துவின் சரீரத்திலே அவருடன் (தேவனுடன்) ஒப்புரவாக்கப்படுகின்றோம் (எபே. 2:16). அது மட்டுமல்ல, கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவை நமது பிரதான ஆசாரியராகப் பெற்றிருக்கின்றோம். ஜெபம் என்பது கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதமாகும்.*

*நாம் கிறிஸ்துவுக்குள் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதம் ஜெபம் மட்டுமல்ல. எபே. 1:3ல் பவுல், ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) இருப்பதாக அறிவித்தார். அவை எல்லாவற்றையும் நாம் இங்கு கணக்கிட முடியாது, ஆனால் அவைகளில் மீட்பு (எபே. 1:7), புது சிருஷ்டியாகுதல் (2 கொரி. 5:17), ஒப்புரவு (எபே. 2:16) மற்றும் நித்திய ஜீவன் (1 யோவா. 5:11) ஆகியவை உள்ளடங்கியுள்ளன.*

## கிறிஸ்துவுக்குள் ஒருவர் எவ்விதம் பிரவேசிக்கின்றார்

*கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் அர்த்தம் என்னவென்றும், அவருக்குப் புறம்பே இருத்தல் என்பதன் அர்த்தம் என்னவென்றும் ஒரு நபருக்குப் போதிக்கப்பட்ட பொழுது, உடனடியாக அவர், "நான் கிறிஸ்துவுக்குள்ளாவதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்க வேண்டும். அந்தக் கேள்விக்கான பதில் வேதத்தின் வசனப் பகுதிகள்*

*இரண்டில் காணப்படுகின்றது:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர். 6:3).*

> *ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா. 3:27).*

*இவ்வசனப் பகுதிகள் நாம் ''கிறிஸ்துவுக்குள்ளாக'' ஞானஸ் நானம் பெறுகின்றோம் என்று கூறுகின்றன. இவைகள் அதை மறைமுகமாய்க் கூறுவதில்லை; இவைகள் அதை அறிவிக்கின்றன! கிறிஸ்துவுக்குள்ளாவதற்கு இது ஒன்றே-அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதே-ஒரே வழியாகும்.*

*ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுமுன்பு, அவர் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்றார். அவர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது, கிறிஸ்துவுக்குள் அப்பொழுது இருக்கின்றார், பிறகு அவர் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள்ளேயே இருக்கின்றார். ஒருவர் ஞானஸ்நானம் பெறுமுன்பு தமது இருதயத்தையும் வாழ்க்கையையும் ஆயத்தம் செய்ய வேண்டும். அவர் மனம் வருந்திய விசுவாசியாய் இருக்க வேண்டும் (மாற். 16:16; அப். 2:38). மனம் வருந்திய விசுவாசி மட்டுமே வேதவசன ரீதியாக ஞானஸ்நானம் பெற முடியும். மனம் வருந்திய விசுவாசியொருவர் தமது பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு, கிறிஸ்துவுக்குள் இருக்கின்றார்.*

## கிறிஸ்துவுக்குள் ஒருவர் வாழ்வது எப்படி

*கிறிஸ்தவ வாழ்வு மற்றும் மரணம் பற்றி மூன்று விளக்கங்கள் சுருக்கியுரைக்கின்றன. இவைகளை நீங்கள் கவனிக்கையில், இவைகள் உங்கள் வாழ்வை விவரிக்கின்றனவா என்று உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்.*

*(1) "கிறிஸ்துவுக்குள்ளாகுதல்." இது நாம் ஏற்கனவே விவாதித்துள்ள மனமாற்றமாகும். மனம் வருந்திய விசுவாசி ஞானஸ்நானத்திற்குத் தம்மைக் கீழ்ப்படுத்துகையில், கிறிஸ்துவுக்குப் புறம்பேயிருக்கும் நிலையில் இருந்து கிறிஸ்துவுக்குள்ளாகும் நிலைக்குச் செல்லுகின்றார்.*

*(2) ''கிறிஸ்துவுக்குள் நிலைத்திருத்தல்.'' தொடங்கினால் மட்டும் போதாது. "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், ... அவன் எறியுண்டு ... போவான்'' (யோவா. 15:6) என்று இயேசு கூறினார். நாம் தேவனுக்கென்று கனி கொடுத்து, அவருக்குப் பிரியமாய் இருக்க வேண்டுமென்றால், நாம் நமது வாழ்வு முடியுமட்டும் அல்லது உலகத்தின்*

*முடிவு மட்டும் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருக்க வேண்டும்.*

*(3) ''கர்த்தருக்குள் மரித்தல்.'' ''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'' (வெளி. 14:13). ''இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார்'' (1 தெச. 4:14). கிறிஸ்துவுக்குள் மரிப்பதற்கு நாம் முதலில் கிறிஸ்துவுக்குள்ளாகி, உண்மையாகவும் பரிசுத்தமாகவும் நிலைத்திருக்க வேண்டும்.*

## *முடிவுரை*

*கிறிஸ்தவராகி, கிறிஸ்துவுக்குள் மட்டுமே காணப்படும் ஆசீர்வாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க யார்தான் விரும்ப மாட்டார்கள்? கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்கின்ற யாவரும் உபத்திரவப்படுவார்கள் என்பது உண்மையே (2 தீமோ. 3:12), ஆனால் தேவனுடைய வசனத்தில் காணப்படும் மகிமையுள்ள வாக்குத்தத்தங்களின் (1 யோவா. 5:11; வெளி. 14:13) முன்னிலையில் நாம் இவ்விதமான அற்ப விஷயங்களை மறக்கின்றோம். "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்ல'' (ரோமர் 8:18).*